# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2115/54 - 2019 මාර්තු මස 23 වැනි සෙනසුරාදා - 2019.03.23

*2115/54 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்கமுடைய ஊவா மாகாண சுற்றுலா அபிவிருத்தி பணியக நியதிச் சட்டம் பற்றிய சட்டமூலம்

ஊவா மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் நியதிச் சட்ட நகலை பொது மக்களுடைய கருத்துக்களை விசாரிப்பதற்காக வெளியிடுகின்றேன்.

இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 10 நாட்கள் சென்ற பின்பு சம்பந்தப்பட்ட நகலை ஊவா மாகாண சபையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். இந்நியதிச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பாக ஏதேனும் கருத்துக்களை முன்வைக்க விரும்பினால் இந்த அறிவித்தலின் பின் 10 நாட்களுக்கிடையில் அதன் விடயங்களை கடித மூலம் எனக்கு அறிவித்தல் வேண்டும்.

பாலகே சாலிய சுமேத டி சில்வா,
ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரங்கள், சுற்றுலா, போக்குவரத்து,
நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர்,
ஊவா மாகாண சபை.

ஊவா மாகாண விளையாட்டு, இளைஞர் விவகாரங்கள்,
சுற்றுலா, போக்குவரத்து, நெசவுக் கைத்தொழில் மற்றும்
சிறு கைத்தொழில் அமைச்சு,
ஊவா மாகாண சபை,
பதுளை,
2019, மாச்சு 14.

**ஊவா மாகாணத்தினது மாகாண சபையின்**

**2019 ஆம் ஆண்டின் .... ஆம் இலக்கம் கொண்ட சுற்றுலா அபிவிருத்திப் பிரிவின் நியதிச் சட்டம்**

ஊவா மாகாணத்தினுள் சுற்றுலாத் தொழிலின் அபிவிருத்தி ஊக்குவிப்பு மற்றும் வழிகாட்டல் என்பனவற்றுக்காக ஊவா மாகாண சுற்றுலா பணியகமொன்றை அமைத்தல் மற்றும் அத்துடன் இணைந்ததான அல்லது அதற்குச் சமமான அனைத்து விடயங்களுக்காகவும் சட்ட திட்டங்களை ஆக்குவதற்கான நியதிச் சட்டமாகும்.




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தினது மாகாண சபையினால் இவ்வாறு சட்டவாக்கம் செய்யப்படுகின்றது.

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்த நியதிச் சட்டமானது ஊவா மாகாணத்தினது மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் ... ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தின் நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன் ஊவா மாகாண ஆளுநர் அவர்களினால் அங்கீகரிக்கப்படும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

## பகுதி I

### ஊவா மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகமொன்றை உருவாக்கம் செய்தல்

ஊவா மாகாண சுற்றுலா பணியகமொன்றை அமைத்தல்.

2. (1) இந்நியதிச் சட்டத்தின் மூன்றாவது பிரிவில் குறிப்பிடப்படும் இலக்குகளை எய்துவதற்காக (இதன் பிறகு “பணியகம்” என அழைக்கப்படும்.) ஊவா மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகம் என்ற பெயரினால் அழைக்கப்படும் பணியகம் ஒன்று இத்தால் நிறுவப்படும்.

(2) பணியகமானது (1) ஆவது உப பிரிவில் அதற்கு வழங்கப்பட்டிருந்த பெயரிலான ஒரு கூட்டுத்தாபனமாக அமைய வேண்டியதாகவும் இடையறாது நடைமுறையில் இருக்க வேண்டியதாகவும் பொதுவானதொரு பதவி முத்திரையைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். பணியகத்தினால் பணியகத்திற்கு எதிராகவும் பணியகத்தின் பெயரில் வழக்குத் தொடர இயலும்.

பணியகத்தின் இலக்குகள்.

(3) பணியகத்தின் இலக்குகள் கீழே குறிப்பிடப்படும் விதத்தில் அமைத்தல் வேண்டும்.

(1) சுற்றுலா தொழிலின் நிலையான அபிவிருத்திக்காக தேசிய மட்டக் கொள்கைகளுக்கு இணையானதாக ஊவா மாகாணத்திற்கான கொள்கைகள், உபாயங்களுடனான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அதன் அடிப்படையிலான செயற்றிட்டங்களை செயற்றிறனுடனும் வெற்றிகரமாகவும் நடைமுறைப்படுத்தல்.

(2) பங்கேற்பு முகாமைத்துவ பிரவேசத்தினூடாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், போசனசாலை உரிமையாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், சுதேச மற்றும் வெளிநாட்டு அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் உட்பட சுற்றுலாத் தொழிலுடன் தொடர்பான பல்வேறு சாராருடன் புரிந்துணர்வுடன் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் இடைத் தொடர்புகளை ஏற்படுத்தல்.

(3) தற்போது சுற்றுலாப் பயணிகளுக்கிடையில் பிரபலமடைந்துள்ள ஊவா மாகாணத்தின் சுற்றுலாக் கவர்ச்சிமிக்க இடங்களில் வசதிகளை விருத்தி செய்வதன் ஊடாக சுதேச மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலகுவாகவும் பாதுகாப்புடனும் ஊவா மாகாணத்தின் அழகை ரசிப்பதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் ஊவா மாகாணத்தின் சுற்றுலாக் கவர்ச்சி என்ற வகையில் பிரபலமான இயற்கை மற்றும் கலாசார விழுமியங்களை எதிர்கால பரம்பரையினருக்காகப் பாதுகாத்து வைத்தல்.

(4) ஊவா மாகாணத்தினுள் புதிய சுற்றுலா கவர்ச்சிமிக்க விடயங்களை அடையாளம் காணல், அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல், மாகாண சபை நிதியின் மூலம் மற்றும் உள்நாட்டு-வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து நிதியைப் பெற்று ஊவா மாகாணத்தின் அழகினை மெருகூட்டும் வகையில் நிலையான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(5) சுற்றுலாத் தொழிலுடன் அண்மித்த நேரடியான மற்றும் மறைமுக தொழிலாளர்களினதும் தொழில் வழங்குநர்களினதும் தொழில் அபிவிருத்தி மற்றும் தொழிலின் பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்தல்.

(6) மாகாணத்தின் இளைஞர், யுவதிகளுக்கு சுற்றுலா மற்றும் உபசரிப்பு சம்பந்தமான தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல்களை வழங்குவதன் ஊடாக மாகாணத்தின் மனிதவள உள்ளீட்டை அதிகரித்தல்.

(7) புதிய சுற்றுலாச் சந்தைகளை இனங்காணல், இலக்குச் சந்தைகளை வகைப்படுத்தல் மற்றும் உபாயகரமான விற்பனைகளைப் பயன்படுத்தி ஊவா மாகாணத்தை ஒரு சுற்றுலாப் பயண இலக்காக விளம்பரப்படுத்தவும் விருத்தி செய்யவும் தொடர்ச்சியான செயற்றிட்டம் ஒன்றைத் தயாரித்தல்.

(8) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர்களையும், நிறுவனங்களையும் தொடர்புபடுத்திக் கொண்டு உல்லாசப் பயணத்துக்கு உரிய புதிய உத்திகளை ஏற்படுத்திக்கொள்வதன் ஊடாகவும் உள்நாட்டு, வெளிநாட்டு அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதன் ஊடாகவும் மாகாணத்தினது சுற்றுலாத் தொழிலின் நிலையான தன்மையை உறுதிப்படுத்தல்.

4. பணியகத்தின் காரியங்களும் கடப்பாடுகளும் கீழ்க்கண்டவாறு அமைதல் வேண்டும் : *காரியங்களும் கடப்பாடுகளும்.*

(1) (2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கம் கொண்ட சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படாத) ஊவா மாகாணத்தினுள் தற்போது செயற்பட்டு வருகின்ற சுற்றுலா விடுதிகளையும், தங்கு விடுதிகளையும் பதிவு செய்தல் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்படும் சுற்றுலா விடுதிகளுக்காகவும், தங்கு விடுதிகளுக்காகவும் அங்கீகாரம் வழங்குதலும் பதிவு செய்தலும்.

(2) ஊவா மாகாணத்தினது சுற்றுலாத் தொழிலின் தர அபிவிருத்திக்காக சுற்றுலா விடுதிகள் மற்றும் சேவைகள் வழங்குநர்களின் முகாமைத்துவம், மேற்பார்வை மற்றும் தரத்தை உறுதிப்படுத்தி சான்றிதழ் வழங்குதல், அதற்கான கட்டணங்களை நிர்ணயித்தல் மற்றும் கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(3) ஊவா மாகாணத்தினுள் பிரசித்தமான மற்றும் பிரசித்தமற்ற சுற்றுலா கவர்ச்சிமிக்க இடங்கள் தொடர்பில் அறிவூட்டுவதற்கும் சுற்றுலாக் கவர்ச்சிகளை மேம்படுத்துவதற்கு வழிகோலும் நூல்கள், புகைப்படங்கள், வீடியோ நாடாக்கள், வரைபடங்கள் மற்றும் காட்சிப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விநியோகம், ஊவா மாகாணத்தின் சுற்றுலா முடிவிடங்களின் அழகிய காட்சிகளை அதிகரிக்கும் வகையில் மாகாணத்தின் சுற்றுலா கவர்ச்சிமிக்க இடங்களின் விபரங்கள் அடங்கிய வலையமைப்பு சுற்றுலா வழிகாட்டலுக்குரிய மென்பொருள் நிர்மாணம் மற்றும் வேறு தொழில்நுட்ப வசதிகளை உருவாக்குதல்.

(4) உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற் சந்தைகளை நோக்காகக் கொண்டு சுற்றுலாத் துறைக்குரிய மனித வளங்களைப் பயிற்றுவித்தலுக்காக இலங்கைச் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் அத்தகைய நிறுவனங்களுடன் புரிந்துணர்வுடன் செயற்படுத்தல், பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் பயிற்சி நிலையங்களை நடாத்திச் செல்லல்.

(5) ஊவா மாகாணத்தின் சுற்றுலாத் தொழிலின் அபிவிருத்திக்காக அரச அலுவலர்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அனுபவப் பகிர்வு செயற்றிட்டங்களையும் செயலமர்வுகளையும் ஏற்பாடு செய்தல், மேற்பார்வைகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்வதனூடாக சுற்றுலாத் தொழிலின் அபிவிருத்திக்கான நவீன அறிவு மற்றும் சிறந்த வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை பயனுறு தன்மையுடன் ஈடுபடுத்திக்கொள்ளல்.

(6) ஊவா மாகாணத்தினது சுற்றுலா கவர்ச்சிமிக்க இடங்களின் அடிப்படை வசதிகளின் அபிவிருத்தி சுற்றுலாப் பயணத்துக்கான வீதி அபிவிருத்தி, சுற்றுலா ஓய்வு விடுதிகள், தகவல் நிலையங்கள், சுற்றுலா சுகாதார வசதி நிலையங்கள், கேளிக்கை விளையாட்டு வசதிகள் மற்றும் உடற்பயிற்சி நிலையங்கள் என்பனவற்றை நிறுவுதல், அவற்றைக் கொண்டு நடாத்துதல் மற்றும் அவற்றுக்கான கட்டணங்களை அறவிடல்.

(7) சுற்றுலாத் தொழிலின் அபிவிருத்தியில் நேரடியாகப் பங்குகொள்ளும் சுற்றுலா விடுதிகள், சுற்றுலா விற்பனை நிலையங்களுக்கான வசதிகளை ஏற்படுத்துதல், சுற்றுலாத் தொழிலின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் சவால்கள் பற்றி அறிவூட்டல் மற்றும் வலுப்படுத்துவதற்கான பயிற்சி செயலமர்வுகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் ஏற்பாடு செய்தல்.

(8) சுற்றுலாத் தொழிலின் அபிவிருத்திக்கான செயற்திட்டங்களுக்காக உள்நாட்டு வெளிநாட்டு மூலதனங்களிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளல், முதலீடுகளை ஊக்குவித்தல், மனித வளத்தையும் பௌதிக வளத்தையும் ஈடுபடுத்தி எதிர்பார்க்கும் இலக்குகளை சென்றடைவதற்காக பணியகத்தின் ஆளணியினரை வழிநடாத்துதல்.

(9) பணியகத்தின் ஆளணித் தேவைக்கு அமைய ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், பயிற்றுவித்தல் மற்றும் கொள்ளளவு அபிவிருத்தியூடாக சிறந்ததொரு ஆளணித் தொகுதியினைக் கட்டியெழுப்புவதற்காக பிரிவின் ஊழியர்கள் தொடர்பிலான செயற்றிறனை மதிப்பீடு செய்தல் மற்றும் பின்னூட்டலை மேற்கொள்ளுதல்.

(10) பணியகத்தின் நோக்கத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அசையும் மற்றும்/அல்லது அசையாச் சொத்துக்களை உரித்தாக்கிக்கொள்ளல், பேணுதல், குத்தகை அல்லது வாடகைக்கு விடுதல் அல்லது பெறுதல், அடகு வைத்தல், கைமாறு செய்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் அப்புறப்படுத்தல், இறக்குமதி செய்தல் மற்றும் பிரிவின் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக தேவைப்படக்கூடிய பொருட்கள், உபகரணங்கள், நிதியுதவிகள், ஆளணியினரையும் வேறு உதவிகளையும் ஏற்றுக்கொள்ளல் மற்றும் இனங்காணப்பட்ட தரப்பினருக்கு வழங்குதல்.

## பகுதி II

### பணிப்பாளர் சபை

பணியகத்தின் பணிப்பாளர் சபையினை நியமித்தலும் அதன் கடப்பாடுகளும்

பணிப்பாளர் சபையின் அமைப்பு.

5. (1) பணியகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பணிப்பாளர் சபையொன்று அமைக்கப்பட வேண்டியதுடன் அச்சபையானது பதவிவழி உறுப்பினர்கள் ஐந்து பேரையும் பெயர் குறிப்பிடப்படும் உறுப்பினர்கள் நான்கு பேரையும் கொண்டதாக அமைதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் சபைக்கு பதவி வழியாக நியமனம் பெறும் உறுப்பினர்கள் கீழ்க்காணும் நபர்களாக இருத்தல் வேண்டும் :

(அ) ஊவா மாகாண சுற்றுலாத் துறைக்குப் பொறுப்பான அமைச்சினால் நியமிக்கப்படும் அமைச்சின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் ;

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் ஓர் அலுவலர் ;

(இ) ஊவா மாகாண சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் ஓர் அலுவலர் ;

(ஈ) சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஓர் அலுவலர் ;

(உ) ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவப் பிரிவின் விரிவுரையாளர் ஒருவர்.

(3) பணிப்பாளர் சபைக்கு பெயர் குறிப்பிடப்படுகின்ற வகையில் இடம்பெறும் உறுப்பினர்கள் கீழ்க்காணும் நபர்களாக இருத்தல் வேண்டும் :

(அ) விடயப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற மொணராகலை மற்றும் பதுளை மாவட்டங்களின் ஹோட்டல் உரிமையாளர்களின் பிரதிநிதிகள் இருவர் ;

(ஆ) விடயப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற சுற்றுலா வழிகாட்டிகள் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவர் ;

(இ) சுற்றுலாத்துறை தொடர்பில் விசேட அறிவுகொண்ட நபர்களில் விடயப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர்.

(4) பணிப்பாளர் சபையினால் கண்காணிப்பாளர்களாக கூட்டங்களில் சமுகமளிப்பதற்குத் தகுதியானவர்கள் எனக் கருதப்படும் சுற்றுலாத் துறையில் பிரபலமான அல்லது பணியகத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு வேண்டப்படும் அறிவு, ஆற்றல் நிறைந்த நபர்களுக்கு அழைப்பு விடுக்கலாம்.

(5) பெயர் குறிப்பிடப்படுகின்ற ஓர் அங்கத்தவர் தனது பதவியைத் துறத்தல் ஊடாக உரிய காலத்துக்கு முன்பதாக பதவிவழி அங்கத்தவராயின் விடயப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட அங்கத்தவராயின் அமைச்சரினால் பதவி விலக்கப்பட்டாலன்றி ஒவ்வோர் அங்கத்தவரும் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் பதவி வகித்தல் வேண்டும்.

(6) (1) பணியகத்தின் தவிசாளராக பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கிடையில் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் என்ற விடயம் சம்பந்தமாக போதிய அறிவு கொண்ட ஒரு நபரை விடயப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படல் வேண்டுவதுடன் அவர் மூன்று ஆண்டுகள் தனது பதவியை வகித்தல் வேண்டும். *பணியகத்தின் தவிசாளர்.*

(2) சபையின் தவிசாளரினால் அனைத்து சபைக் கூட்டங்களுக்கும் தலைமை வகிக்கப்படல் வேண்டும்.

(7) பணிப்பாளர் சபை குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட வேண்டும்.

(8) விடயப் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் மற்றும் அளவுப்படி ஆளுநரின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் சபையின் அங்கத்தினர்களுக்கு வருகை தருகின்றமைக்கு இணங்க கொடுப்பனவொன்று வழங்கப்பட வேண்டும்.

6. (1) பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக சுற்றுலாத் தொழில் தொடர்பிலான தகுதிபெற்ற பொருத்தமானதொரு நபர் மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தின் பேரில் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட வேண்டியதுடன் அவர் பணியகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாதல் வேண்டும். *பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர்.*

(2) முகாமைத்துவப் பணிப்பாளரினால் சபையின் அங்கீகாரத்துடன் மற்றும் அவர் தேவையெனக் கருதும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவருக்கு பிறப்பிக்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள யாதாயினும் ஒரு காரியத்தை அல்லது கடப்பாட்டை சபையின் யாராயினும் ஓர் அலுவலரிடம் ஒப்படைக்க இயலும் என்பதுடன் அவ் அலுவலர் பணிப்பாளரின் கட்டளைக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு அக்கடமைகளை அல்லது காரியங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும். *பணிப்பாளர் தனது கடப்பாடுகளை யாரிடமாவது ஒப்படைக்க இயலுமென்பது.*

(3) முகாமைத்துவப் பணிப்பாளர் சபையின் சகல கூட்டங்களுக்கும் சமுகமளிப்பதற்கும் கூட்டத்தில் கதைப்பதற்கும் பணிப்பாளருக்கு உரிமை இருக்க வேண்டியதுடன் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரிமை இருக்கலாகாது.

(4) முகாமைத்துவப் பணிப்பாளர் தலைவரதும், பணிப்பாளர் சபையினதும் பொதுவான கட்டளைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு பணியகத்தின் அலுவலர்களையும் ஊழியர்களையும் நிர்வகிப்பதுடன் பணியகத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(5) மாகாண சபையின் அங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற கொடுப்பனவொன்று முகாமைத்துவப் பணிப்பாளருக்கு வழங்கப்படல் வேண்டும்.

(6) பணியகத்தினது முகாமைத்துவப் பணிப்பாளரினது பதவிக்காலம் மூன்று ஆண்டு காலமாவதுடன், விடயப் பொறுப்பான அமைச்சரினால், அமைச்சு செயலாளரின் இணக்கப்பாட்டுடன் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

(7) சுகவீனமுற்றிருத்தல் அல்லது இலங்கையை விட்டு வெளிநாடு சென்றிருத்தல் அல்லது வேறு யாதாயினும் ஒரு காரணத்தினால் பணிப்பாளர் தனது காரியம் அல்லது கடப்பாட்டை நிறைவேற்ற இயலாத சந்தர்ப்பங்களில், அவர் சமுகமளிக்காதிருக்கும் காலகட்டத்தினுள் அவருக்குப் பதிலாகக் கடமை மேற்கொள்வதற்காக பணியகத்தின் வேறொரு சிரேஷ்ட அலுவலரை சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரினால் நியமிக்கவியலும்.

(8) பணியகத்தின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பிலும் முகாமைத்துவப் பணிப்பாளர் வகைகூற வேண்டியதுடன், பணிப்பாளர் சபையினால், பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் பொறுப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இந்நியதிச் சட்டத்தின் வேறும் சட்டதிட்டங்களின் கீழ்,

(அ) பணியகத்தினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர்களின் திறன் வளர்ச்சி ;

(ஆ) பணியகத்தின் நோக்கங்களை எய்துவதில் பணியகத்தின் வினைத்திறனையும் பயனுறு தன்மையினையும் மேம்படுத்தல் ;

(இ) பணியகத்தின் நோக்கங்களை எய்துவதற்குத் தேவைப்படுகின்ற சேவைகளை ஏற்பாடு செய்தல் முகாமைத்துவப் பணிப்பாளரின் கடப்பாடாகும்.

*பணியகத்தின் உத்தியோகத்தர் குழாமை நியமித்தல்.*

7. (1) பணியகத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்க்கும்போது ஆளணித் தொகுதியின் தேவையினை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் நிலையான ஆட்சேர்ப்பு நடைமுறையினைப் பின்பற்றி ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் வேண்டும்.

(2) பணியகத்தின் ஊழியர்களினால் கடமைப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது தாபனக் கோவை, நிதிச் சட்டங்கள் மற்றும் பணிப்பாளர் சபையினால் காலத்துக்குக் காலம் பிறப்பிக்கப்படும் கட்டளைகள் என்பன பின்பற்றப்படுதல் வேண்டும்.

பகுதி III

**நிதி**

*கணக்கிற்குக் கிடைக்கப்பெறும் பணம்.*

8. பணியகத்திற்கெனப் பணியகத்தின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றில் தனியான கணக்கொன்று இருத்தல் வேண்டும்.

(1) கீழ்க்காணும் நிதிகள் பணியகத்தின் கணக்கில் வைப்பில் இடப்படல் வேண்டும் :-

(அ) பணியகத்தின் பிரயோசனத்திற்காக ஊவா மாகாண சபையினால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் அனைத்துவித நிதி ;

(ஆ) அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற அனைத்துவித நிதி ;

(இ) வழங்கல்கள், நன்கொடை, அன்பளிப்புகள் என்ற வகையில் கிடைக்கப்பெறும் அனைத்துவித நிதி ;

(ஈ) இந்த நியதிச் சட்டம் அல்லது வேறு யாதாயினும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் பணியகத்தின் கணக்கிற்கு கிடைக்கும் நிதி ;

(உ) சுற்றுலாத் தொழிலுடன் இணைந்ததான சேவைகளை ஏற்பாடு செய்வதற்கான ஆலோசனைச் சேவைகளை ஒரு வெளி நபருக்கு/ நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் பெறப்படும் வருமானம் ;

(ஊ) சுற்றுலா அபிவிருத்தி நோக்கத்திற்காக உரிய இடங்களை அமைக்கும்போது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதன் மூலமாக பெறப்படும் வருமானம் ;

(எ) இலங்கைச் சுற்றுலா மற்றும் விருந்தினர் உபசரிப்பு முகாமைத்துவ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படாத அதனுடன் தொடர்பான வேறு பயிற்சிகள், குறுங்காலப் பயிற்சியைப் பெறுதல் சம்பந்தமாக அறவிடப்படும் நிதி ;

(ஏ) சுற்றுலா தொழில் தொடர்பிலான விடயங்களை (ஆலோசனை நூல்கள், கையேடுகள், தெளிவான காட்சிகளைப் புகைப்படமெடுத்தல் மற்றும் அத்துடன் இணைவான வேறு விடயங்கள்) வெளியிடுவதன் மூலம் சேகரிக்கப்படும் நிதி ;

(ஐ) நினைவுச் சின்னங்கள்/ ஞாபகார்த்த பரிசில்கள் ஆகியவற்றை நிர்மாணிக்கும் காரியத்தில் ஈடுபட்டிருக்கும் சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்காக அவர்களின் பெறுமதியை அதிகரிக்கும் பயிற்சிப் பட்டறைகளின் மூலம் சேகரிக்கப்படும் நிதி.

(2) பணியகத்தின் நோக்கங்களை எய்துவதற்காக கடமைகள், காரியங்களை நிறைவேற்றுகின்ற போதும் செயற்படுத்துகின்ற போதும், பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை ஈடுசெய்வதற்குத் தேவையான அனைத்துப் பணமும் பணியகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

9. பணியகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

10. பணியகத்தினால் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பிலும், சொத்துக்கள் மற்றும் கடன்கள் தொடர்பிலும் வேறும் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் முறையான புத்தகங்களைப் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

11. கணக்காய்வு சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை சட்டத்தின் 23(1) மற்றும் 23(2) ஆகிய பிரிவுகள் ஏற்புடையனவாவதுடன், ஊவா மாகாண சபை சுற்றுலாப் பணியகத்தின் கணக்கினை அரசியல் யாப்பின் 154 ஆவது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட திகதி கொண்ட கணக்காய்வாளர் ஒருவரினால் வருடாந்த கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## பகுதி IV

### பொதுவான சட்டதிட்டங்கள்

12. (1) நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைய முகாமைத்துவப் பணிப்பாளரினால் ஒவ்வோர் ஆண்டிலும் அடுத்த ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டமானது ஒவ்வோர் ஆண்டும் செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்துக்காக அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) முகாமைத்துவப் பணிப்பாளரினால் ஒவ்வோர் ஆண்டும் முந்திய ஆண்டுக்கான நடவடிக்கைகள் தொடர்பான விபரமான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சருக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) 2 ஆவது துணைப் பிரிவின் கீழான அறிக்கை ஒவ்வோர் ஆண்டும் யூன் மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(4) அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் அவ்வறிக்கை ஊவா மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

13. அமைச்சரினால் காலத்துக்குக் காலம் இந்த நியதிச் சட்டத்தின் கீழான அதிகாரங்கள், கடமைகள் மற்றும் காரியங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் சம்பந்தமாக சபைக்குப் பொதுவான அல்லது விசேட கட்டளைகளைப் பிறப்பிக்க இயலும் என்பதுடன், அத்தகைய கட்டளைக்கு ஏற்றவாறு செயற்படுவது சபையின் காரியமாதல் வேண்டும்.

பணியகத்தின் அதிகாரிகளும் ஊழியர்களும் அரசாங்க ஊழியர்களாதல்.

14. பணியகத்தின் சகல அங்கத்தவர்கள் மற்றும் அலுவலர்கள், ஊழியர்கள், பிரதிகள் குற்றவியல் சட்டக் கோவைக்கு ஏற்ப மற்றும் அதன் காரியங்கள் தொடர்பில் அரசாங்க ஊழியர்கள் எனக் கருதப்படல் வேண்டும்.

பணியகமானது இலஞ்ச, ஊழல் சட்டங்களுக்கு அமைவானதொரு நிறுவனமாதல்.

15. இலஞ்ச, ஊழல் சட்டக்கோவையின் கருத்துப்படி இந்தப் பணியகமானது பட்டியல்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுவதுடன், அந்தச் சட்டக் கோவையின் சட்டதிட்டங்கள் அவ்வாறே கருதப்படல் வேண்டும்.

16. (1) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பணியகத்தினால் நல்லெண்ணத்துடன் நிறைவேற்றப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் யாதாயினும் ஒரு நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற அல்லது பணிப்பாளர் சபையின் யாதாயினுமொரு கட்டளையின் பேரில் அல்லது இந்த நியதிச் சட்டத்தின் கீழ், பணியகத்தின் யாராயினுமோர் அங்கத்தவர், அலுவலர் அல்லது ஊழியரினால் நல்லெண்ணத்துடன் ஆற்றப்பட்டதாகக் கூறப்படும் யாதாயினுமொரு நடவடிக்கைக்கு எதிராக எவ்விதமான சிவில் அல்லது குற்றவியல் வழக்கொன்றையும் தாக்கல் செய்யவியலாது.

(2) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் சபையின் கட்டளைப்படி பணியகத்தினால் ஆற்றப்பட்ட அல்லது ஆற்றப்பட்டதாகக் கூறப்படுகின்ற யாதாயினுமொரு நடவடிக்கை தொடர்பாக யாராயினும் ஒரு நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட யாதாயினும் ஒரு சிவில் அல்லது குற்றவியல் வழக்கில் அந்த குறிப்பிட்ட நடவடிக்கை அவரினால் நல்லெண்ணத்துடன் ஆற்றப்பட்டதாக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டால் (1) துணைப் பிரிவில் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஒரு நபரினால் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகை பணியகத்தின் கணக்கிலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

அமைச்சரின் கட்டளைகள்.

17. (1) தீர்மானிக்கப்பட வேண்டுமென இந்த நியதிச் சட்டத்தின் மூலம் தீர்மானங்களையும், கட்டளைகளையும் ஆக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படக்கூடிய சகல விடயங்களுக்காகவும் அல்லது அது தொடர்பில் அமைச்சரினால் கட்டளைகள் பிறப்பிக்க இயலும்.

(2) அமைச்சரினால் இயற்றப்படுகின்ற சகல சட்ட திட்டங்களும் வர்த்மானியில் வெளியிடப்பட வேண்டியதுடன் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து அல்லது அச்சட்டதிட்டங்களில் தீர்மானிக்கப்பட்ட வகையில் அதற்குப் பிந்தியதொரு தினத்திலிருந்து அமுலுக்கு வருதல் வேண்டும்.

(3) அமைச்சரினால் இயற்றப்படுகின்ற சகல சட்டதிட்டங்களும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டுவதுடன் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து கூடிய விரைவில் அங்கீகாரத்துக்காக ஊவா மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத யாதாயினுமொரு சட்டமானது அங்கீகாரம் மறுத்தளிக்கப்பட்ட தினத்திலிருந்து அதன்கீழ் முன்பு ஆற்றப்பட்ட எதற்கும் இடையூறு ஏற்படாத வகையில் நிராகரிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) மேலே (1) ஆம் உப பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் கட்டளைகள் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அவை இந்த நியதிச் சட்டத்தின் ஊடாக பிறப்பிக்கப்பட்டவையாக அமுலுக்கு வருதல் வேண்டும்.

18. இந்த நியதிச் சட்டத்தை அல்லது இதன்கீழ், பிறப்பிக்கப்படுகின்ற யாதாயினும் ஒரு கட்டளையின் யாதாயினும் ஒரு சட்டத்தை மீறுகின்ற அல்லது அதற்கமைய செயற்படுவதை மறுதளிக்கும் ஒவ்வொருவரும் குற்றவாளியாவதுடன், ஒரு நீதிவான் முன்னிலையில் குற்றவாளியாக்கப்படின் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தண்டப்பணம் செலுத்துவதற்கு அல்லது குறித்த சிறைத் தண்டனையும் தண்டமும் ஆகிய இரண்டுக்கும் அவர் உட்படுதல் வேண்டும். தவறுகள் மற்றும் தண்டனைகள்.

19. சொற்கள் சம்பந்தமாக வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இந்த நியதிச் சட்டத்தில்– பொருள் கோடல்.

“மாகாண சபை” என்பதன் மூலம் ஊவா மாகாணத்தின் மாகாண சபையும்,

“ஆளுநர்” என்பதன் மூலம் ஊவா மாகாண ஆளுநரும்,

“அமைச்சர்” என்பதன் மூலம் ஊவா மாகாண சுற்றுலாத் துறைக்குப் பொறுப்பான அமைச்சரும்,

“அமைச்சுச் செயலாளர்” என்பதன் மூலம் ஊவா மாகாண சுற்றுலாத் துறைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரும்,

“அங்கீகரிக்கப்பட்ட வங்கி” என்பதன் மூலம் அமைச்சரின் பரிந்துரையுடன் அங்கீகரிக்கப்பட்ட அரச வங்கியும்

எனக் கருதப்படல் வேண்டும்.

20. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிச் சொற்றொடர்களில் யாதாயினும் ஒவ்வாமை காணப்படுமிடத்து சிங்கள மொழிச் சொற்றொடரே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்றல்.

04-202

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.